# மெட்ரோ ரயிலில் பயணம் பார்வையற்றோர் மகிழ்ச்சி



சென்னை, நவ. 19–
மெட்ரோ ரயிலில் நேற்று, பார்வையற்றோர் இலவச பயணம் அழைத்து செல்லப்பட்டனர்.

சர்வதேச சேவை அமைப்பான, 'நேத்ரோதயா' மற்றும் மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில், கண்பார்வையற்ற மாணவர்கள், ஆசிரியர்கள், திருமங்கலத்தில் இருந்து, விமான நிலையம் வரை, மெட்ரோ ரயிலில் அழைத்து செல்லப்பட்டனர்.

மெட்ரோ ரயில் தொழில்நுட்பம் மற்றும் வசதிகள் குறித்தும், நிலையங்களில் பார்வையற்றோருக்கான வசதிகள் குறித்தும், அதிகாரிகள் தெரிவித்தனர்.

மே மாதத்தில் இருந்து, தற்போது வரை, மெட்ரோ ரயிலில், அரசு பள்ளிகளைச் சேர்ந்த, 20 ஆயிரத்து, 300 மாணவ – மாணவியர், இலவச பயணம் அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என, மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்து உள்ளது.